செய்தி வெளியீடு எண்: 485 நாள் : 13.09.2013

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (13.9.2013) தலைமைச் செயலகத்தில், வனத்துறை அலுவலர்களின் பணி பயன்பாட்டிற்காக 7 கோடியே 28 லட்சம் ரூபாய் செலவில் வாங்கப்பட்ட 113 பொலிரோ ஜீப்புகளை வழங்கினார்கள்.

வனங்கள் தேசத்தின் சீரான வளர்ச்சியிலும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன. நாட்டிலுள்ள மக்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களைத் தீட்டி செயல்படுத்துவதைப் போல, காட்டிலுள்ள விலங்குகள் மற்றும் சுற்றுச்சூழலுக்குப் பாதுகாப்பு அளித்திடவும், அவைகளின் உறைவிடமான வனப்பகுதியை மேம்படுத்திடவும், தமிழகத்தைப் பசுமை மாநிலமாக மாற்றிடவும் பல சீரிய திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

தமிழகத்தில் உள்ள வனப் பகுதிகளையும், வன விலங்குகளையும் பாதுகாப்பது, மனிதர்களுக்கும், வன விலங்குகளுக்கும் மோதல் ஏற்படாமல் தடுப்பது, வனங்களில் தீத்தடுப்புப் பணி, வனப்பரப்பை அதிகரிக்கும் அரசின் திட்டங்களைச் செயல்படுத்துவது போன்ற பல்வேறு பணிகளை வனத்துறையினர் ஆற்றி வருகிறார்கள். வனத்துறையினர் அரசின் திட்டங்களை விரைவாகவும், செம்மையாகவும் செயல்படுத்திட ஏதுவாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 113 பொலிரோ ஜீப்புகளை வனத்துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக கொள்முதல் செய்ய உத்தரவிட்டார்கள்.

அதன்படி, 7 கோடியே 28 லட்சம் ரூபாய் செலவில் வாங்கப்பட்ட 113 பொலிரோ ஜீப்புகளை வனப் பாதுகாப்பு மற்றும் வன வளர்ச்சி பணிகளை விரைந்து மேற்கொள்ளும் வகையில் உதவி வனப் பாதுகாவலர் மற்றும் வனச் சரகர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் திரு எம்.எஸ்.எம். ஆனந்தன், தலைமைச் செயலாளர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு மோகன் வர்கீஸ் சுங்கத், இ.ஆ.ப., முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் திரு கௌதம் டே, இ.வ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9
நாள்: 13.9.2013